352 352

REGD No. M 3843

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந்தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கரு. } திட்டை. பிரமாதி—மாசி 1940—மார்ச்—1௳ { திங்கள் எ.

எண்.	உள்ளுறை.		பக்கம்.
1.	அம்மானைப் பருவக் கருங்காட்சிகள்	...	153
2.	சமய வொற்றுமை	...	157
3.	சந்தேக நிவிர்த்தி	...	165
4.	பாராட்டுப் பாக்கள்	...	168
5.	தமிழ்	...	169
6.	ஆத்மாவின் வியாபகவறிவை முழு மறைப்பாக மறைத்திருப்பது ஆணவமலமே	}	171
7.	வீரமகளிர்	...	173

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 MAR 1940
MADRAS

ஆசிரியர்:— ராம. சு ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

செய்தித்திரட்டு.

உள்ளூர்:— சிவாலயத் திருப்பணி சுவாமிகோயிலும், சுற்றுக்கோயில்களும், மண்டபம் திருமதில்களும் நடைபெறுகிறது. சிவாலயத்தில் இம்மதி ௧௦வ வளர்பிறை சதுர்த்தசியில் நடராசரபிடேகம் கர்ணம் திரு, மு. பாலசுப்பிரமணிய ஐயரால் நடைபெற்றது. ௨௪வ மகாசிவராத்திரி பூசைக்கு, தேவகோட்டை திருவாளர், ராம. அரு. அரு. ராம. சிவநிதியிலிருந்து ரூ ௨௫ வந்து கர்ணம் திரு, மு. பாலசுப்பிரமணிய ஐயர் பெற்றுக்கொண்டிருக்கிறார். வழக்கம்போல் மாண்புற நடத்துவிப்பர்.

பலவான்குடி:— குமாரவிநாயகர் திருக்கோயிலில் மாசி ௯வ நடராசரபிடேகம் நடைபெற்றது.

மதுரைமாநகரின் மாஜிஸ்திரேட்டார் முன்பாக சிவநேசன் இராமசாமி செட்டியார் மீது ஹெட்மேன் நயினுமுகமது, கும. சு. குமரப் செட்டியார் முதலானவரின் தூண்டுதலும் துணையுங்கொண்டு தொடுத் அவதூறு வழக்கு பிப்ரவரி 21வ தள்ளப்பட்டது. வாதிபக்கத்தில் . இராமநாதச் செட்டியார் முதலானவர்கள் சரியாக விசாரிக்கப்பட்டார்க வாதிக்கு S. S. பாரதியார், S. L. பாரதியார்; எதிரிக்கு N. R. கிருஷ் சாமி ஐயங்கார், N. கிருஷ்ணசாமி ஐயங்கார் ஆகிய திருவாளர்கள் வ சுறிஞர்களாக இவ்வழக்கை நடாத்தினர்.

ஹெட்மேன்களுக்கு வரிவிதிக்கும் அதிகாரங்கூட இருப்பத எண்ணி ஏமாறும் மக்களுக்கு மதிவாணர்கள் ஹெட்மேன்கள் வரித்தண் லாளர்களேயல்லாமல் வரிவிதிக்கும் அதிகாரிகளல்லர் என்பதை எடு விளக்கி உணர்த்தவேண்டும்.

ஆசிரியப்பாவின் அரங்கேற்றம்:— தேவகோட்டை ஜாயிண்டு மா டிரேட்டார் முன்பாக சிவநேசன் இராமசாமிசெட்டியார்மீது, கும. குமரப்பசெட்டியார் தொடுத்தஅவதூறுவழக்கு வாதிபக்கத்தில் 1. வா 2. சரவணமுதலியார், 3. குமாரவீரையர், 4. வயி. ராம. அ. கிருஷ்ண செட்டியார், 5. மு. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியார், 6. கப. க கருப்பன் செட்டியார், 7. அ. இராமநாதன் செட்டியார் ஆகியவர்கள் எதிரிபக்கத்தில் புதுக்கோட்டை மகாராஜாகாலேஜ் தமிழ்ப்பண்டிதர், கனகராஜையரும் விசாரிக்கப்பட்டார்கள். மற்றுமுள்ளசான்றுகளின் வி ரணை மார்ச்சு 4வ தேவகோட்டையில் நடைபெறும்.

குன்றக்குடி:— அமரர்த்தாங்கும் குமரநாயகர்க்கு பங்குனி ௧௨வ காப்ட கட்டிக் கொடியேற்றி உத்தரத் திருவிழாத் தொடங்கி ௯வ மயிலாடும் ப றை மண்டபப்படியுடன் நிறைவேறும்.

காஞ்சீபுரம்:— மெய்கண்டார் கழகத்தினர் மாசி ௧௫வ காலை பெரிய காஞ்சீபுரம் மதுராந்தகன் கோட்டத்தில் முக்கால ஞானேசர் திருக்கோயில் வழிபாடும், அப்பெருமான் பெருமை பொருளாக, திரு. க. வச்சிரவேலு முதலியார் விரிவுரையும், பிற்பகல் ஆடிசன்பேட்டை முத்தீசர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாட்சிறப்பும், திரு, செ. முத்துவீராசாமி நாயுடு அவர்கள் தலைமையில் விரிவுரைகளும், ௧௪வ மாலை திருவேகம்பநாதர் சந்நிதியில் உயர்திரு; ஞானியார் சுவாமிகள் ஒரைம்பதாண்டுகளாக ஆற்றி வரும் திருத் தொண்டினைப் போற்றும் வழிநிலைக் குறிப்பாக திருவாளர், புரிசை சு. முருகேச முதலியாரவர்கள் தலைமையில் கழகத்தின் 16-வது வெளியீடாக சிவஞான போதவெளியீடும் செய்தனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கரு. | பிரமாதி – மாசி 1940—மார்ச்—1௨ | திங்கள் எ.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

அம்மானைப் பருவத் தருங் காட்சிகள்.

(திருத்தென்குடித்திட்டை சித்தாந்த வித்தியாசாலைத் தமிழாசிரியர்,
திரு, த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்.)

'பாண்டியிலிருவர் ஆண்டியிலிருவர்' என்பதொரு பழமொழி. இப் பழமொழிக்கு அறிஞர் பலர் பலபடியாகப் பொருள் கூறுவர்; எனினும், இங்குள்ள இயைபுகருதி ஒருவகையிற்பொருள் கூறுவாம். பாண்டியில் இருவர் என்பது பாண்டிநாட்டிற் பிறந்தார் இருவர் எனப்பொருள்படும். ஆண்டியிலிருவர் என்பது துறவற நிலையிலுள்ளார் இருவர் எனப்பொருள்படும். எனவே, பாண்டிநாட்டிற் பிறந்தவர்களாகித் துறவறநிலையிலுள்ள பெரியாரிருவர் என்று கூறுதலே இவ்விடத்துப் பொருத்தமுடையதெனத் தோற்றுகிறது. மற்றொருசாரார் அரசரிலிருவர் ஆண்டியிலிருவர்' எனவும், 'பாண்டியிலிருவர் ஆண்டியிலிருவர்' எனவும் வழங்கும் பழமொழிகளுக்கு வரதுங்கராம பாண்டியர், அதிவீரராம பாண்டியராகிய இரண்டு அரசர்களெனவும், துறவியரிருவரெனவும் பொருள் கூறுவர். இனிப் 'பாண்டியிலிருவர் பட்டரில் இருவர்' எனக் கூறுவதுமுண்டு. இங்கு பட்டராவார் ஆசாரியர் என்னும் பொருட்டு. எவ்வாறாயினும் ஈண்டு ஆராய்ச்சிக்கண் எடுத்துக்கொள்ளப்பட்டது துறவறப் பெரியாரிருவரைப்பற்றிய செய்தியேயாம். அப்பெரியா

ருள் ஒருவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். மற்றொருவர் ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள். இவ்விருபெரியாரும் பாண்டிநாடேயன்றித் தமிழ்நாடு முழுவதும் செய்த தவப்பயனாய் அவதரித்தவர்கள். கலைச் செல்வத்திலும், தவச் செல்வத்திலும், சிவாநுபூதிச்செல்வத்திலும் ஒருவரையொருவர் விஞ்சிவிளங்குவர். சின்னாட் பல்பிணிச் சிற்றறி வினேமாகிய எம்மனோரால் அவர்கள் பெருமைகளைக் கூறுதலொண் ணாது. அவ்விரு பெரியாரும் அறிவுடையாருக்கு இருகண்மணிகளை யொப்பர். இருவரும்தென்பாண்டி நாட்டாரேயாவர். சோழநாட்டி லுள்ள சுத்தாத்வைத சித்தாந்த சைவ ஆதீன மடாலயங்களுள் திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறையை விளக்கினர் ஸ்ரீமாத வச் சிவஞான சுவாமிகள். தருமபுர ஆதீனத்தை விளக்கினர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். இவ்விரு பெரியாரும் அருளிய நூல் கள் பல. அவைகளில், செந்தமிழ் மணம் கமழ்கின்றது; சைவ நலங் கனிந்தூறுகின்றது; வடமொழிச் சுவை மலிந்துள்ளது. "நூலாய்ந்த பேர்திருநெல்வேலி நாட்டாரன்றோ".

நிற்க, இவ்விருபெரியாரும் அருளிச்செய்த நூல்களுட்பிள்ளைத் தமிழும் உள்ளது. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை யருளிச்செய்தனர். ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமி கள் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழை யருளிச் செய்தனர். பிள்ளைத் தமிழ் கற்பாருக்கு இவ்விரண்டு பிள்ளைத் தமிழ்களும் பெருவிருந்தா மென்பதொருதலை. இவ்விரு முனிவரர்களும் ஒரு பொருளைக் குறித் துத் தத்தமக் கேற்றவாறு கற்பனைசெய்யப்புகுகின்றனர். அக் கற்பனை எம்மனோருளத்து ஒன்றினொன்று விஞ்சிச் சுவைதந்து விம்மிதந்தருகின்றது. அம்மானையாடுதல் மகளிருக்குரிய விளையா டல்களுளொன்று. அவ்விளையாடலில் இருபெரியாருடைய உள்ள முந் திளைத்தெழுகின்றன. குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை யார் திருக்கரத்தில் முத்தம்மானைகளையும் மாணிக்கவம்மானைகளையும் விளையாட்டுக் கருவிகளாகத்தருகின்றார். மாதவச் சிவஞான சுவாமி கள் முத்தம்மானைகளையும் பவளம் பதித்த அம்மானைகளையும் அமுத வல்லியாருக்குரிய விளையாட்டுப் பொருளாகத் தருகின்றார். இருவர் கைகளிலும் உள்ள அம்மானைகள் செந்நிறமும் வெண்ணிறமும் பொருந்தியனவே. முன்னர் மீனாட்சியம்மையாரை விளையாட [illegible]னர் நங்குருபரர். அம்மையாரும் ஆடத் தொடங்கு

கின்றார். இவ்வாடலில் கவினுங் கருத்துமொன்றிக் கற்பனை செய்யத்தொடங்குகின்றாரிவர். அம்மையாருடைய காந்தள் மலர் போன்ற தளிர்மென் கரத்தினின்று முத்தம்மானை முன்னும் மாணிக்கவம்மானைபின்னுமாக விரைந்து செல்லுகின்றன. அம்மையாருடைய திருக்கரத்தைத் தாமரையாகவும், நித்திலவம்மானையை வெண்மதியாகவும், மாணிக்கவம்மானையைச் செங்கதிராகவும் தம் கற்பனைக்கருத்திலிருத்துகின்றார் குருபரர். தம்மனைவியைப்புணர்ந்து செல்லும் ஒரு விடனைத் துரத்தியோடுகின்ற ஒருவனைப் போலத் தாமரைமலர்போன்ற கரத்தினின்று செல்லும் நித்திலவம்மனையும் அதன் பின்னர்ச் செல்லும்மாணிக்கவம்மானையும் சுவாமிகள் அகக் கண்ணிற்குப் புலனாகின்றன. தாமரை மலராகிய தம்மனைவியைக் கலை நிரம்பிய வெண்மதிக் கடவுள் புணர்ந்தோடுவதைத் தெரிந்து வெங்கதிர்க்கடவுளும் பின்னரே துரத்திச்செல்லுவதாகஉவமித்துக் கற்பனை செய்கின்றார்கள் சுவாமிகள். தண்ணியனாயினும், நிரம்பிய கலைகளையுடையனாயினும், புலவருளொருவனாயினும் இவன் குருமனைவியைப்புணர்ந்த கொடியதூர்த்தனன்றோ எனச்சினந்துமனம் புழுங்கிக் காய்கதிர்க் கடவுள் துரத்திக்கொண்டு பின்னே விரைந்து ஓடுவதாகத்தங்கற்பனையைமுடிக்கின்றார். அப்பாடல் வருமாறு:—

"குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலம்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோகனக மனையாட்டிபாற்
கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்கும்
காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக்
கறங்கருவி தூங்கவோங்கும்
மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
மதகளிறு பிளிறியோடும்
அலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே". என்பது.

நமது மாதவச் சிவஞானயோகிகள் அமுதாம்பிகையிடத்து அம்மானைகளைத்தந்து அவருடைய இளம்பருவவிளையாட்டை நோக்கித் திளைத்துமகிழும் மற்றொருகாட்சியையும் இனிக்காண்பாம். நம் சிவஞானயோகிகள் அமுதாம்பிகைதிருக்கரத்துத்தந்தவை பவளவம்மானையும்முத்தம்மானையும் என்பதைமறுபடியும் நினைவிற்கொண்டு வருதல் வேண்டும். முத்தம்மானை வெண்ணிறமும் பவளவம்மானை செந்நிறமுமுடையன. அமுதாம்பிகை அம்மானையாடத் தொடங்குகின்றார். அவ்விளையாடலில் நமது சுவாமிகளும் கருத்தையுங் கண்ணையுஞ் செலுத்திக் கற்பனைசெய்யத் தொடங்குகின்றார்கள். அக்கற்பனை கற்பாருளத்துக் களிப்பை யுண்டுபண்ணுவது. ஆன்மகோடிகள் உய்யுமாறு வரந்தரும் நித்தராகிய சிவபெருமானுடைய இரண்டுகண்களும் இருபெருஞ்சுடராகிய சந்திரசூரியரன்றோ? முன்னொருகாலத்து விளையாட்டாக அம்மையார் இறைவரது கண்களைக் கரங்களாற் புதைப்ப உயங்கி வருந்தினவர் அச்சூரிய சந்திரரன்றோ? பின்னொருகால் அம்மையார் அவ்விளையாட்டயர்வராயின் முன் நசுக்குண்ட நாம் பின்னும் நசுக்குண்ணுவோமே என அச்சுற்று அக்கரங்களுடன் உறவாடி நயந்துகொள்ளுவோமென நிச்சயித்து விண்ணினின்றிழிந்து செங்கதிர்க்கடவுளாகிய சூரியனும் வெண்கதிர்க் கடவுளாகிய சந்திரனும் வந்து அக்கரங்களுடன் உறவு கொண்டுதிரும்பி விண்ணிற் செல்லுகின்றனர் எனக்கற்பனை செய்கின்றார்கள். பவளவம்மானை செங்கதிர்க் கடவுளுக்கும், முத்தம்மானை வெண்கதிர்க் கடவுளுக்கும் உவமை. இக்கற்பனை நயம் ஆழ்ந்துசிந்தித்தற்குரியது. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளருளிய இக்கற்பனைக் கவிவருமாறு:—

"உய்ய வரந்தரு நித்தன் முகத்தி லுயங்க முனந்தகையும்
ஒண்கர மின்னு மொறுத்த லுறாதுற வாடி நயப்பமெனா
வெய்ய நெருப்பெழு செங்கதி ருங்குளிர் வீசு பனிக்கதிரும்
மேவியகங்கையி னோடுறு கேண்மை விளைத்துவிண் ணேகுதல்
செய்ய மணிப்பவ ளத்தினிழைத்த செழுந்திர ளம்மனையும் [போற்
தெள்ளிய முத்தினிழைத்த கதிர்க்குவை சிந்திய வம்மனையும்
ஐய நகைப்பொசி யத்தளி ரங்கையி னாடுக வம்மனையே
ஆரந்தை துரந்து சூலங்கை புரந்தவ ளாடுக வம்மனையே".

சமய வொற்றுமை.

——()[]()——

(சைவத்திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள்.)

(140-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹைதர் அவ்வுபகாரத்தைச் செய்தவராகவே யிருக்கட்டும். அவர் பெருமையாகக்கொண்டவொரு கொள்கையைத் தம் ஆட்சியிலுள்ள மற்றை யிசுலாமியருங் கொள்ளும்படி தூண்டியிருக்கலாம். இசுலாமியருங் கோயில்களுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ்செய்க வென்று அவர் விண்ணப்பம் ஏதேனும் விடுத்துளரா? அதற்காதாரமுண்டா? ஹைதர் லிங்கமென்பது வேறேதேனும் பெயருடையதாயிருந்திருக்கும். ஹைதர் அக்கோயிலை யிடிக்கவந்திருப்பர். உம் பெயருள்ளஇலிங்கமிது இதனைக்கட்டிவிடுமென்றுஅவரிடம் பொய் சொல்லி அவரை ஏய்த்திருப்பர் அக்கோயிலார். யானைக்குக் கண்ணோய் நீக்கிய கதையை இசுலாமியர் சம்மதியார். பொய்க்கதைகளை யெல்லாங் கற்பித்து நம்பிக் கண்டவிடங்களிலெல்லாம் போய் முட்டிக்கொண்டழுபவர் ஹிந்துக்களே.

திப்பு ஒரு சாமியாரைக் காப்பாற்றினுரென்றால் அம்மட்டில் அவர் நல்லவரே. அவர்க்கது கடனுமாம்.

எல்லா மதஸ்தரும் நேசப்பான்மை கொண்டிருக்கவேண்டுமென்பது யார்க்கும் விருப்பமே. அப்பொருட்டு மூலந் தெரியாத சுண்ணும்புக்கதை என்?

அக்பர் ஹிந்துக்களையும் முசிலீம்களையும் ஒற்றுமைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் நிகழ்த்திய காரியங்களிற் கலியாணமொன்றெனச் சொல்லப்படுகிறது. அவர் தமக்கும் தம் வர்க்கத்தாரிற் சிலர்க்கும் ரஜபுத்ர ஹிந்துஸ்திரீகளை மனைவிமாராக்கினர். பல ஹிந்து சரித்திரக்காரரும் அதை உடன்பட்டு மதிப்பதுமுண்டு. ஆனல் அவருக்குக் கொஞ்சம் மானம் இருந்திருக்குமானல் சிறிது ஆழ்ந்த யோசனை யுண்டாயிருக்கும். அக்பரும் அவர் மதத்தவர் சிலரும் ஹிந்துஸ்திரீகள் சிலரைப் பெண்டாண்டது போல இசுலாமிய ஸ்திரீகள் சிலரை ஹிந்து ரஜபுத்திரர் சிலரும் பெண்டாள அவ்வக்பர் இடங்கொடுத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட கலியாணம் ஒன்றையாவது அவர் நடத்திவைத்தாரா? இல்லையே. கொள்வதுபோற் கொடுப்பது மிருந்தாலன்றோ சமத்துவமான சாசுவதமான கௌரவமான ஒற்றுமைக்கு வழியுண்டு. பெண்டிரைக் கூட்டிக்கொடுத்து உத்தியோகங்களை அவர் பெற்றார் இவர் பெற்றாரென்ற பிரஸ்தாபங்கள் பலர் காதில் விழுந்திருக்கும். அப்படிப்பட்ட சில மானக்கேடர்செய்த காரியங்களையே அக்பர் செய்துவைத்த கலியாணங்களென்று சரித்திரக்காரர் எழுதிவைத்த

னர் போலும். அத்தகைய வெட்கங்கெட்ட ஹிந்துக்களே சந்திர வதனமோஹியென்ற இடத்துக்குப்போவர். அந்தக்கதையில் அந்த ராஜகுமாரி முசிலீமாகவும் அந்த வழிப்போக்கன் ஹிந்துவாக வும் இருந்திருந்தால் அந்த மோஹியருக்கு முசிலீம்கள் போவரா? மாட்டவே மாட்டாரென்க.

மசூதிக்குப் போகாமல் வருகிற ஹிந்துக்களின் பிரார்த்தனை யைத் தான் ஏற்றுக்கொள்வதில்லையென்று சொன்ன சபரிமலைத் தெய்வம் முசிலீம்களுக்கு அப்படி ஏதாவதொருகட்டளையிட்டதா? முசிலீம்கள் அதனைப் போற்றி அதற்கஞ்சியதாகப் பிரஸ்தாபித் துளரா?

திருப்பரங்குன்றத்தில் சிக்கந்தர் மசூதிக்குப் போகிற ஹிந்துக் கள் உண்டு. ஆனால் எந்தமுசிலீமும் சுப்பிரமணியரின் கோயிலுக்கு வந்து அவரை வணங்குவதில்லை. வணங்குவதாக என். என். சொல் வது முழுப்பொய். அவர் சொல்லும் மற்றைக் கதைகளிலும் எத்தனை பொய்களிருக்குமோ?

நாகூரிலும் மைசூரிலும் பொட்டற்புதூரென்ற இன்னொரு ரிலும் உள்ள மசூதிகளுக்கு ஹிந்துக்கள் கூட்டங் கூட்டமாய்ப் போவது வாஸ்தவந்தான். அது ஹிந்துக்களின் விரிந்த நோக்கத் தையே காட்டுகிறதென்று என். என். மாத்திரஞ் சொல்லவில்லை; சென்னையில் மந்திரியாயிருந்த ஸி. ஆர். முதலியவருஞ் சொல்கின்ற னர். அவர் எந்த முகத்தை வைத்துக்கொண்டு அப்படிச் சொல் கின்றனரோ? தெரிந்திலது. உண்மையில் அவர் முடிவு அதுவே யாயின் அவர் தம் படிப்பையும் நியாய புத்தியையும் மனவுணர்ச்சி யையும் அடகு வைத்துவிட்டனரென்பது சத்தியம். விரிந்தநோக் கமும் பரந்தமனப் பான்மையும் யாருக்கு வரும்? அவை வரு தற்கு மக்களிடம் சிறிதும் உழைப்பிருக்கவேண்டாமா? அம் மசூதிகளுக்குப் போகும் ஹிந்துக்களின் மனம் அவ்வளவு விரிந்துவிட்டதா? நோக்கம் அவ்வளவு பரந்துவிட்டதா? அவ ருட் புத்திசாலி ஆயிரத்துக்கொருவனுமிருக்கமாட்டானே. அறியாமையாலும் அச்சத்தாலும் பிற கீழ்மைக் குணங்களா லும் கவரப்பட்டவராய்த்தானே அவர் அவ்விடங்களுக்குச் செல் கின்றனர். என். என்., ஸி. ஆர். போன்றவருக்கு அவ்வவ மானம் உறைக்கவில்லையே. மானத்தைவிற்று நேசத்தை வாங்கு வார் உண்டா? ஏழை ஹிந்துக்கள் செய்யும் இழிவணக்கத்தை மெச்சிக்கொண்டு இசுலாமியரின் ஒற்றுமைக்கு ஆசைப்படுவது ஆண்மையாகுமா? நாகூருக்கும் மைசூருக்கும் பொட்டற் புதூருக் கும் மசூதி வணக்கத்தின் பொருட்டுச் செல்லும் ஹிந்துமங்கைகள் போல் சைவமாதி சமயத்தவரின் கோயில்களில் நடக்கும் எந்த உத்ஸவத்திற்கு முஸ்லீம்கள் தம்பெண்டு பிள்ளைகளுடன் மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டு திரள் திரளாகச் சுவாமி தரிசனத்

தின் பொருட்டு வருகின்றனர்? வந்தாலும் என். என். போன்றும் ஸி. ஆர். போன்றும் உயர்பதவியிலுள்ள எந்த முசிலீம் அதை மதித்துப் பேசுகின்றார்? ஹிந்துக்கள் அவரவர் இருக்கும் ஊர்களிலுள்ள மசூதிகளுக்குத் தம் குழந்தைகளை எடுத்துக்கொண்டு போய் மந்திரம் பண்ணிக்கொள்கின்றனர்; அவ்விசுலாமியருக்குரிய பஞ்சா உத்ஸவத்தில் வேஷம் போட்டு ஆடுகின்றனர். அன்றியும் அவர் மாதாகோவில்களுக்குப்போய் மெழுகுவர்த்திகளை வாங்கி வைத்துக் கொளுத்தி ஏசுவையும் மரியாளையும் வணங்குகின்றனர். அத்தனைக்கும் அவருடைய மானங்கெட்டதனமே காரணமாமென்க. அதனை மதித்துப் பேசுவது பொருப்புள்ளவருக்குச் சிறிதும் அடாது. அவ்வணக்க முறை ஹிந்துமுசிலீம் ஒற்றுமையைக் காட்டவே செய்யாது. கிறிஸ்தவருள் மூடரில்லையா? அவராவது மசூதிக்குப் போகின்றனரா? எந்த முசிலீம் மாதா கோவிலுக்குப் போகின்றான்? அப்படிப் போகாமையால் அவ்விரு மதத்தினருக்குள் மனஸ்தாபமா விளைகிறது? இல்லையே. ஆகலின் அந்நியமத நிலயங்களிற் போய் வணங்குவது மூடத்தனமும் அதனை மதிப்பது முழுமூடத்தனமுமாமென்க.

பாபாபுதன் மலையிலுள்ளது தத்தாத்ரேயரின் கோயிலா அல்லது கலாந்தரின் கல்லறையா வென்பதை என். என். போன்ற சரித்திரக்காரர் கண்டுபிடிக்கவேண்டும். அவர் கடன் அது. இன்றேல் அவர் படிப்பும் ஆராய்ச்சியும் பயனற்றனவாம். உரியவருக்கு அந்தவிடம் போவதே நியாயம். மற்றவர் அதனைவிட்டு விலகவே வேண்டும். முசிலீம் அதிற் பூசாரியும் அதற்குச் சொந்தக்காரருமாக விருப்பதாகச் சொல்லப்படுவதால் ஹிந்துக்கள் அதனைவிட்டு விலகுவதே முறை. அது தத்தாத்ரேயரின் கோயிலாகவிருந்தால் அதனையும் தவளப்பன்குட்டாவிலுள்ள கோவிலையும் அவை போன்று அந்நியமதநிலயங்களாகமாறியுள்ள பிறவற்றையும் மீளத் தம்மத நிலயங்களாக்கி அவற்றிற்போய் வணங்குவதே அந்த ஹிந்துக்களுக்கு ஆண்டகைமையாம்.

வரநந்தினி யென்பவள் அவ்விக்கிரகத்தில் இலயமாய்விட்டது வாஸ்தவமாயின் அவள் இசுலாத்தை விட்டு விலகி அவ்விக்கிரக சமயத்துக்கு வந்துவிட்டவளாகவே கருதப்படுவள். அதனால் இசுலாமியரெல்லாருமே அம்மதத்துக்கு வந்தவராகார். அவ்விக்கிரக சமயத்தவரும் அவளைமதிப்பதனால் அவ்விசுலாத்தையும்மதித்தவராய்விடமாட்டார்.

ஒருவன் தன்மதத்துக்குரிய கோயிலில் இன்னொரு மதத்தவன் வந்து தங்கவும் அவன் செத்தபிறகு அப்பிரேதத்தை அக்கோயிலிலேயே அடக்கஞ் செய்யவும் இடங்கொடுப்பது மடமை யென்பதைப் பேனு கொண்டாலூர்த் தலைவன் அறியாமற்போனது தப்பு. ஹிந்துக்களுக்குள் ஒருவன் ஞானியென்று சொல்லப்பட அவனை

மசூதிக்குள் அழைத்துப்போய்த் தங்கவைக்கவும் அவன் செத்த பிறகு அப்பிரேதத்தை அம்மசூதியில் அடக்கஞ் செய்யவும் எந்த முசிலீமாவது ஒருப்படுவானா? அப்பக்ருதீனால் உண்டாக்கப்பட்ட சாதி அசல் முசிலீமாகாதவாறு அசல்ஹிந்துவுமாகமாட்டாதென்க.

முசிலீம்களுக்கு இசுலாமே சிறந்தமதம். குரானிற் சொல்லப் பட்ட வழிபாட்டுமுறைதான் அவருக்கு நலந்தரக்கூடியது. அம் முறைப்படி வழிபடுமிடங்களுள் மசூதியும் ஒன்று. அவருக்கு அவ ரல்லாதவரெல்லாருங் காப்பிரிகளே. அக்காப்பிரிகள் காப்பிரிகளா யிருந்துகொண்டே அல்லாவையும் நாகூர்மீரான்போன்ற இசுலாமி யப்பெரியோரையும் வணங்குவது அவ்விசுலாமியருக்குச் சம்மதமா யிருக்கமுடியாது. எந்தக் காப்பிரியும் சுன்னத்துப் பண்ணிக் கொண்டு கலிமாச்சொல்லப்பெற்று இசுலாமியனான பிறகே அல்லா வையும் மீரான்போன்றவரையும் வணங்கவேண்டும். காப்பிரியா யிருந்துகொண்டும் அவ்வணக்கஞ் செய்யலாமென்று எந்த முசிலீ முஞ் சொல்லமாட்டான். அப்படியிருக்க அக்காப்பிரிக் கூட்டங் களுக்குத் தம் மசூதி முதலிய தொழுமிடங்களில் அவ்விசுலாமியர் எப்படிப் பாத்தியா முதலியன செய்துவைக்கின்றனர்? அக்காப் பிரிகளுக்கு மானங்கிடையாது. அவருட் படித்தவரென்போர் பலரும் அக்காப்பிரிகள் செய்யும் அம்மானங்கெட்ட வணக்கமுறை களை ஆதரிக்கின்றனர். ஆகவே அக்காப்பிரிகளுக்கு மானத்தைக் காத்துக் கொடுக்கவேண்டியவர் அம்முசிலீம்களே. அவர்க்கு அக் காப்பிரிகளிடம் உண்மையான அனுதாபமிருக்குமானால் அவர்மசூதி களுக்கு வணக்கஞ்செலுத்தவருகிற அக்காப்பிரிகளை முதலில் இசு லாமியராகச் சொல்லவேண்டும். அக்காப்பிரிகள் அதற்குச் சம் மதிக்கவில்லையானால் அவரை அம்மசூதிகளினின்றும் ஓட்டுவதே அவ்விசுலாமியருக்கு முறை. அப்பொருட்டு ஒரு விளம்பரப்பலகை யையும், அதைப்படித்தும் இசுலாமியராகாமலே உள்ளேவர எத்த னிப்பவரை அடித்து ஓட்ட வேறேதேனுமொன்றையும் மசூதி களின் வாயில்களிற் கட்டித்தொங்கவிடுவது நலம். இசுலாத்தி னிடம் நேர்மையான பற்றுண்மையும் அதுவே. கேவலம் அக் காப்பிரிகள் கொண்டு வந்துகொட்டுகிற உண்டிப்பணத்துக்கு ஆசைப்பட்டு முசிலீம்கள் தம்மதோத்ஸவங்களில் அக்காப் பிரிகளையுஞ் சேர்த்துக்கொள்ளுதல் அவருக்குப் பெருமையாகாது. கிறிஸ்தவ கத்தோலிக்கரும் தம் மாதாகோவில்களுக்குவரும் அஞ் ஞானக் கூட்டங்களுக்கு அதுவே செய்க. இது எம் விண்ணப்பம்.

ஹிந்துக்காப்பிரிகளும் அஞ்ஞானிகளும் செய்கிற சமயக் குழப்ப வணக்கங்களால் சமயங்கள் ஒன்றுபட்டிடா. அவற்றை ஒன்றுபடுத்தி அதன்மூலம் மக்களுக்குள்ளும் ஒற்றுமையை உண் டாக்கிவிடலாமென்றெண்ணுவதும் நடவாத காரியமே. எல்லா மதங்களும்இருக்கவேவேண்டும். அவை தனித்தனியாகவும் இருக்க

வேண்டும். புதிதாக வுண்டாகும் மதங்களுக்கும் உலகிலிருக்க வுரிமையுண்டு. மக்கள் தத்தம் அறிவிற் கியைந்த மதத்தை ஆசரிக்க எவ்விதத் தடையுமிருத்தல் கூடாது. மதங்கள் பலவாயிருத்தலால் மக்களுக்குட் சண்டை ஏற்பட்டுவிடாது. உலகில் ஒவ்வொன்றிலும் பன்மையுண்டு. தேசப்பன்மை பாஷைப்பன்மை சாதிப்பன்மை கட்சிப்பன்மை முதலியன காண்க. அப்பன்மைகளையெல்லாம் ஒருமையாக்க எவனால் முடியும்? அப்படியே மதப்பன்மையையும் ஒருமையாக்க எவனாலு முடியாதென்க.

உலகில் தேசப்பன்மை சாதிப்பன்மை பாஷைப்பன்மை கட்சிப்பன்மைகளுக்கெல்லாம் பிராபல்யங் கொடாமல் சமயப்பன்மைக்கு மாத்திரம் முதன்மை கொடுப்பதாயிருந்தால் மக்களுக்குட் சண்டை மிகக்குறைவாகவே யிருக்கும். இவ்வுண்மையைக் கூர்ந்து நோக்குக. ஒரே மதத்துக்குள் தேசப்பன்மைக்குப் பிராபல்யங் கொடுத்துச் சண்டையிடுவதைச் சீன சப்பானியரிடம் இன்றுங் காணலாம். அவ்விருதேச மக்களும் தம் சமயத்துக்குப் பிராபல்யங் கொடுத்திருந்தால் தம்முட் சண்டையிடமாட்டார். மதப்பன்மையாலும் ஆங்காங்குச் சில சண்டைகளுண்டெனக் கொண்டாலும் அவற்றை நிவர்த்திப்பதற்கு மதங்களை ஒன்றுபடுத்துதலென்பது வழியாகாது. ஆயின் மதச்சண்டையை யொழிப்பதற்கு வேறு மார்க்கங்களெவை யெனின்பின்வருவன ஒருவாறு மார்க்கங்களாகலாமென்க.

1. சைவ சமயம் பெரிதா வைஷ்ணவ சமயம் பெரிதா என்பதும் இசுலாம் மதம் பெரிதா கிறிஸ்தவமதம் பெரிதா என்பதும் போன்றனவே உண்மையான மதச்சண்டைகள். அச்சண்டைகளால் அநேக கண்டன நூல்கள் வெளிப்படும். அவற்றால் மக்களுக்கிடையில் இரத்தவெள்ளம் பெருகியதாகத் தெரியவில்லை. சிலர் அறியாமையால் அந்நியமதங்களை ஏசுவர். அவ்வேசல்நூல்கள் வேறு. அக்கண்டன நூல்கள் வேறு. ஏசல்நூல்களால் சில அடிதடிகள் ஏற்படலாம். அதுவும் சுருங்கிய கால அளவில் தோன்றிமறையக் கூடியதே. ஆனால் சில அரசுகள் தம் வலிமையையுந் தலைமையையும் போற்றிக்கோடற்குத் தம் மதத்தைப் புகல்காட்டி மக்களைச் சேகரிப்பதுண்டு. அப்போதுண்டாகுஞ் சண்டைதான் பயங்கரமா[illegible]. ஓரரசு[illegible] கீழ்க்

குடிகளும் ஒரேமதத்தையுடையனவாயின் அவ்வரசு அம்மதநீதியில் நடைபெறலாம். அரசு ஒரு மதமாகவும் குடிகள் பல்வேறு மதங்களாகவு மிருந்தாலும், அரசே பல்வேறு மதங்களின் கலப்பாயிருந்தாலும் அந்த அரசுகளெல்லாம் தம் ஆட்சிக்காலத்தில் மதசம்பிரதாயங்களிற் கலவாமலிருக்கவேண்டும். ஆங்கில அரசு கிறிஸ்தவ அரசு. பரதகண்டத்துக்குடிகள் பலவேறு மதங்கள். அவ்வரசு அக்குடிகளின் மதங்களிற்பிரவேசியாமலே இந்நாட்டை இத்தனைகாலம் ஆண்டுவருகிறது. காங்கிரசினரசு பலமதங்களின் கலப்பு. அது சிலமதசம்பிரதாயங்களிற் பிரவேசித்து ஆலயப் பிரவேச சட்டமுதலியன இயற்றியது. அதனால் அது வீழ்ந்தது. ஆகலின் மதங்களைப் புகலாக வைத்துக்கொண்டு உண்மையிற் சண்டையிடுவன அரசுகளேயாமென்க. 'The latest developments in Russia show increased anti-religious activity, according to the Vatican Wircless which says that religious gatherings of children are absolutely forbidden and those responsible will be severely punished. Judges have been ordered to impose the death penalty on all participants in religious demonstrations irrespective of age' என்று ஒரு அரசுகட்டளையிடுமேயாயின் அதுநாஸ்திகத்தின் கொடுமையா? அன்று. நாஸ்திக மதத்தைப் பற்றிக்கொண்டு அவ்வரசு ஆஸ்திகமதஸ்தரை நடத்துங் கொடுமையேயாமென்க. அக்கட்டளையை 15—11—1939 ஹிந்துவிற் காண்க. இங்கிலாந்தில் வகைவகையான கிறிஸ்தவங்களிருக்கின்றன. ஒருவகையைப்போல் இன்னொரு வகையை யாக்கவேண்டுமென்று அத்தேச அரசு முனைகின்றதா? அவ்வாங்கில அரசுபோல் மற்றையரசுகளும் மதசம்பிரதாயங்களிற் பிரவேசியாமலிருந்தால் மதச் சண்டைகள் உண்டாகவே மாட்டா.

2. அரசு குடியரசாயிருக்குமாயின் அதில் எல்லாமதங்களுக்கும் பிரதிநிதிகளிருக்கவேண்டும். சட்டசபையில் எல்லாமதங்களுக்கும் பிரதிநிதிகளிருந்தாலும் அப்பிரதி நிதிகள் அச்சட்டசபையை அரசசபையென்றேநினைக்கவேண்டும். மதக்கொள்கைகளிற் சிலபலவற்றைக்குற்றமென எண்ணிக்கொண்டு அவற்றைத்திருத்தப்போவதாகச் சொல்லி அவர் அச்சபையை மதங்களிடந் திருப்பக்கூடாது.

3. ஒரு மனிதனுடைய செல்வம் அவனுக்கே சொந்தம். அது அவனுடைய நன்மைக்கே உதவவேண்டும். அவ்வாறு உதவு விப்பது அரசு. அப்படியே ஒரு மதத்தின் நிலயங்களும் அவற்றின் பராமரிப்பிற்கான செல்வங்களும் அம்மதாபிவிருத்திக்கே உதவ வேண்டும். அவ்வாறு உதவுவிப்பது அரசு. அச்செல்வத்தைக் கொண்டு அம்மத மக்கள் தம் மத ஞானத்தை வளர்த்துக்கொள்வ தும் மற்றவருக்குப் புகட்டுவதுமே அவ்வபிவிருத்தியாகும். அம் மதமும் இன்னோயல் மதமும் பல சிறப்புக்கொள்கைகளால் தம் முள் வேறுபட்டிருக்க அவ்விரண்டற்கும் பொதுவாகிய சில கொள் கைகளைக் காட்டி அதன் நிலயங்களையும் செல்வங்களையும் தன்ன வாக்க அவ்வயல் மதம் விரும்புதல் கூடாது. அரசு அவ்வாக்கிர மிப்பைத் தடுக்கவேண்டும். ஒரு மதத்தைவிட்டு விலகியவன் வேறு எக்காரணத்தைக் காட்டியும் அம்மத நிலயச் செல்வங்களை யனு பவிக்க விரும்புதலும் தப்பு.

4. ஒரு மதத்துக்குரிய மதநிலயங்களிற்போய் இன்னொரு மதத்தர் வணங்க அந்நிலயக்காரர் இடங்கொடுத்தல்கூடாது. கொடுத் தால் அவ்வணக்கக்காரருடைய மதத்துக்குரியவரிற் படித்தவரா யுள்ளபேர் அவரைத் தடுக்கும் பொருட்டுத் தம்மதத்தையெடுத்துப் பிரசங்கிக்கவேண்டிவரும். அப்பிரசங்கத்தில் அவ்வணக்கக்காரர் வணங்கும் அயல்மதக்கொள்கைகளையும் அக்கண்டனக்காரர் சிறிதா வது கண்டித்துக்காட்டத்தான் செய்வர். தம்மதத்தவரைக்காத்துக் கொள்ளுநிமித்தஞ் செய்யப்படுகிற மதப் பிரசாரத்தில் இயைபு குறித்து வருகிற அந்நிய மதங்களின் கண்டனத்தை அவ்வம்மதத் துக்குரியவர் காணின் வருந்துவர், வெகுளினும் வெகுளுவர். ஆகை யால் ஒவ்வொரு மதத்தவரும் தம் மதநிலயங்களில் அந்நியமதத்த வர் வந்து வணங்கவொட்டாதபடி அவரே தடுத்துவிடுக. ஆங்காங்கு நடக்கிற சிறு சிறு மதச்சண்டைகளுக்குக்கூட என். என். எடுத்துக் காட்டியனபோலுள்ளவற்றிற் கண்ட சாமானியரின் மதக்குழப்ப வணக்கமே காரணமென்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

5. ஓரளவுபைப் படிப்புடையவனொருவன் தன்மதம் விட்டு இன் னொருமதம் மாறலாம். அதற்கும் சர்க்கார் அனுமதிவேண்டும்.

அவன் அங்ஙனம்மாறவேண்டுமேயானால்அச்செய்தியைக் குறைந்த பக்ஷம் மூன்று மாதங்களுக்கு முன்னரே சர்க்காருக்குத் தெரிவித்துவிட வேண்டும். மதவுயர்வு தாழ்வு கருதியே அவன் அதுசெய்கிறானென்று சர்க்கார் ஆராய்ந்து கண்டால் அவனுக்கு அனுமதி தரலாம். அங்ஙனமின்றி வேறு இலௌகிகங் கருதி அவன் அது செய்கிறானென அரசு துணியுமாயின் அவனைத் தடுக்கவேண்டும்.

6. ஒவ்வொரு மதத்துக்கும் உரிய தெளிவான பெயர் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். சைவம் வைஷ்ணவம் என்பனபோல்வது அப்பெயர். அரச நிலயங்களில் அப்பெயரே பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

7. பலமதங்களுக்கு ஒரு பெயரைப் பொதுவாக வைத்தலென்பது ஒழியவேண்டும். ஹிந்துஅத்துவிதம் சநாதனம் என்பன போல்வது அப்பெயர்.

8. ஒவ்வொருமதத்துக்குந் தெய்வீகப் பிரமாண சாத்திரங்களிவை யென்பதை வரையறுத்துக்கொள்ளவேண்டும். சைவத்துக்கு இருக்காதி நான்கு வேதங்களும் காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களும் இசுலாத்துக்குக் குரானும் போல்வன அவை.

9. ஒவ்வொரு மதமும் தன்மதரீதிப்படிக் கடவுளியல் உயிரியல் உலகியல் உலக சிருட்டிக்கிரமம் முத்தியியல் முதலிய முக்கிய கொள்கைகளைத்தன் மக்களுட் பாமரரும் அறியும்படி பிரஸ்தாபித்துக்கொண்டிருக்கவேண்டும். அரசும் அவற்றைப் பதிவுசெய்து வைத்துக்கொள்ளுதல் நலம்.

10. அந்நிய மதங்களைக் கண்டிப்பதும் ஏசுவதும் ஒன்றாகா. கண்டன நூல்கள் உண்மையை விளக்குவதற்கு அநுகூலமானவைகள். ஒருவன் தன்மதத்தை அந்நியன் கண்டிக்க இடங்கொடுக்க வேண்டும். அதுவிரிந்த நோக்குடைமையையே காட்டும். அவன்தன் மதத்தை ஆராய்ந்தறியவும் அழுந்தி நேசிக்கவும் அக்கண்டன நூல்கள் பெரிதும் உதவும். ஆனால் ஏசல் என்பது அக்கண்டன நூல்களுட் கலக்கவுங் கூடாது, தனிச்சுவடிகளாக வெளிவரவுங்கூடாது.

இன்னவற்றையும் இன்னோரன்னவற்றையும் மக்கள் ஆராய்ந்து கடைப்பிடிக்கின்மதங்கள் பற்றிவருகிற சிறுசண்டைகளும் பெரும்பான்மை யொழியும். சமயங்கள் ஒன்றுபடாவாயினும் அவற்றின் மக்கள் நேசப்பான்மையுடன் வாழ்வர்.

உ

சந்தேக நிவிர்த்தி.

(திக்கம் திரு, சி. செல்லையா பிள்ளையவர்கள்.)

திருஞானசம்பந்தப்பெருமான் குமாரக்கடவுளினது அவதாரமா அன்று எனச் சந்தேகங்கொண்டு, வைதிக சைவ சுத்தாத்துவித சித்தாந்த சைவத்திற்கு அரிய பெரிய தொண்டினை ஆற்றிவரும் எம் சிவநேசன் பத்திரிகையில் "சந்தேக வினு" எனத் தலைப்பெயரிட்டுப் பெரியபுராணம் திருச்செந்தூர்ப் புராணம் திருப்புகழ் என்னும் நூல்களிலுள்ள பாடற் பகுதிகள் சிலவற்றை மூன்று பிரிவாய் எழுதி அவற்றை விளக்கிக் காட்டுமாறு வேண்டிக்கொண்ட சைவமாணவக! திருஞானசம்பந்தப் பெருமான் குமாரக்கடவுளினுடைய அவதாரமல்லர் என்பதனை அகச்சான்றானும் புறச்சான்றானும் உடன்பாட்டானும் மறுதலையானும் எம் சிற்றறிவிற் கெட்டியவாறு காட்டுமுகத்தான் நீவிர் விளக்கமறிய விழைந்த மூன்று பகுதிகளில் முதற் பகுதிக்கு விளக்கங் கூறுவாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் இரண்டாந்திருமுறையில் திருத்தருத்தி என்னுந் திருப்பதிக்குப் பாடியருளிய திருப்பதிகத்தில் ஐந்தாஞ்செய்யுளில், "......................திருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாவென்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்........."

எனச் சுவாமிகளே தம்மருமைத்திருவாயாற் றிருவாய்மலர்ந்தருளியதனால், சுவாமிகள் முன்னைப் பிறவியிலே மேற்கொண்ட ஞானத்திற் கிரியையின் பேறாய்ப்பெற்ற சிவசாமீப்பியத்தில் சிவபிரான் திருவடிகளில் அயரா வன்பு செய்திருந்தாரென்பதூஉம், அங்ஙனமிருந்த பிள்ளையாருக்குப் பிறவிக்குவித்தாய கன்மமிலதாயிற் றென்பதூஉம், அங்ஙனமாயினும் அவரை மயக்கிக் கருவிற் புகுத்தினர் எம்மிறைவர் என்பதூஉம் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற் புலப்படுகின்றன. இவ்வகச்சான்றினையே ஆதாரமாகக் கொண்டு அருண்மொழித் தேவராம் தெய்வச் சேக்கிழார் பெருந்தகையார் தாந்திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணத்து,

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார்"

எனக் கூறியருளினர் என்பதனை நுண்ணுணர்வானுணர்ந்து நோக்குக. குன்றைமுனிவர் கூறுவனவற்றிற்கு அகச்சான்றுகள் பெரும்பான்மையும் திருமுறைகளிற் காணப்படுகின்றன.

இன்னும் இரண்டாந்திருமுறையில் திருத்தெங்கூர்த் திருப்பதிகம் நான்காஞ் செய்யுளில், "பண்டுநான் செய்தவினைகள் பறையவோர்நெறி யருள்பயப்பார்" என்னும் அடியையும் நோக்குக. இதனால் சுவாமிகள் முன்னைப் பிறவியில் இருவினைப் பந்தமுடையரா யிருந்தாரென்பதூஉம், பின்னர்ச் சிவானுக்கிரகத்தாற் பந்தநீங்கித் திருவடியி னயராவன்பு செய்திருந்தார் என்பதூஉம் பெற்றாம். இன்னோரன்ன அகச்சான்றுகள் இன்னும் பல சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பதிகங்களிற் பொதுளியுள்ளன. இவ் உடன்பாட்டு நெறியிற் சான்றுவன.

"இரண்டாந் திருமுறை திருமீயச்சூர்ப் பதிகத்து முதற்செய்யுள் மூன்றாமடியில்,

"மாயச்சூ ரன்றறுத்த மைந்தன் றாதை"

எனவும், திரு அரிசிற் கரைப் புத்தூர்ப் பதிகத்து ஆறாஞ் செய்யுள் முதலடியில், "வள்ளி முலைதோய் குமரன் றாதை"

எனவும், திருப்பிரமபுரப் பதிகம் முதற்செய்யுள் நான்காமடியில்,

"இளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம் பகையெறிவித்த"

எனவும் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்குக்களாலும் குமாரக் கடவுளது திருவவதாரமாயுள்ளாரல்லர் என்பதனைத் தெற்றென உணர்க. தம்மை 'முனி" எனவும், "ஞானசம்பந்தன்" எனவும், "பூசுரன்" எனவும் இடமிடந்தோறுங்கூறியருளுஞ்சுவாமிகள் "சூரறுத்த மைந்தன்" "வள்ளி முலைதோய் குமரன்" "இளங்குமரன் எனத் தன்மையிற் கூறாது படர்க்கையிற் கூறிக் குமரவேளைத் தம்மின் வேறாய்ச் சுட்டிச் சேறலுங் காண்க. இவை மறுதலையாற் கொள்ளப்படும் அகச்சான்றுகளாம்.

கந்தபுராணம் அவைபுகு படலத்தில் குமாரக் கடவுள் வீரவாகுதேவருக்குச் சூானவைக்கணுயர்த்த சிம்மாசனத்தின்வரலாற்றைக்கூறுமிடத்து,

"சித்திலப்படு பத்தருஞ் சிவிகையு நெறியே
முத்தமிழ்க்கொரு தலைவனு மதலைக்கு முதல்வன்
உய்த்தவாறெனக் குமரவேள் வீரனுக் குதவ"

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் வேறு குமாரக் கடவுள் வேறு எனக் கூறியிருப்பதனாலும், சிவஞானபாடியத்து திருஞானசம்பந்த சுவாமிகள் சரியை கிரியை யோகமாகிய மூன்றனையும் முன்னைப் பிறவிகளிற் செய்து முடித்து எஞ்சிநின்றது ஞானமேயாதலால் அதனை இப்பிறவியிற் பெற்றாரென மாதவச் சிவஞானயோகிகள் கூறியிருப்பதாலும் திருஞானசம்பந்த சுவாமிகள் குமாரக் கடவுளல்லர் என்பது பெற்றாம். இவையும் இவை போன்ற பிறவும் புறச்சான்றுகளாம். இத்துணையும் காட்டப்பட்ட அகப்

புறச் சான்றுகளால் திருஞானசம்பந்த சுவாமிகள் குமாரக் கடவுளுடைய அம்சமல்லரென்பது தெளிவு.

அற்றேல் சுவாமிகள்தாம் யாவரோவெனின், அவர் திருவாக்குக்களே அவர் முற்பிறப்பில் ஒருமுனிவராயிருந்தார் என்பதை உணர்த்துகின்றன. முதற் பதிகத்துத் திருக்கடைக் காப்பின் முதலடியில் "அருநெறிய மறை வல்லமுனி" எனவும், இரண்டாந்திருமுறை திருநனிப்பள்ளித் திருப் பதிகத்துத் திருக்கடைக் காப்பு இரண்டாமடியில் "ஞானமுனிவன்" எனவும், மூன்றாந்திருமுறை திருப்பிரமபுரத் திருப்பதிகத் திருக்கடைக் காப்பின் இரண்டாமடியில் "முழு நடலி லெழுமயிர்கள் தழுவுமுனி குழுவினொடு" எனவும் கூறியிருப்பனவற்றை நோக்குக. பரசமயங்களை நிரா கரித்து வைதிக சைவத்தையும் அதன் கண்ணதாய சற்புத்திரமார்க்கத்தை யும் நிறுவுவான் திருவவதாரஞ் செய்த ஒரு முனிபுங்கவரென்பது பெறப் பட்டது.

ஆகவே பெரியபுராணத்துச் "சிவக்கன்று" "புரமெரித்தார் திருமக னார்" என்பன அம்மையார் பொற்கிண்ணத்துத் திருமுலைப்பாலூட்ட உண்டமையானும் புத்திரமார்க்கத்தை நிறுவுவான் திருவவதாரஞ் செய் தமையானும் பெற்ற திருநாமங்களாம்.

அணுபக்கமாய்ச் சிருட்டி திதி சங்காரஞ் செய்யும் முதல்வராயுள்ள பிரமா திருமால் ஸ்ரீ கண்டருத்திரர் ஆகிய மூவரானுஞ் செய்யப்படும் முத் தொழிலும் அவரையதிட்டித்து நிற்கும் முழுமுதற் கடவுளாற் செய்யப்படு வன எனவும், அம்மூவராவாருஞ் சிவமேயென்வுங் கூறப்பட்டிருத்தல் ஒற்றுமைபற்றியேயாம். இதனை, "படைத்தளித் தழிப்பமும் மூர்த்தி களாயினை" எனச் சுவாமிகள் திருவெழுகூற்றிருக்கையிற் கூறியதுகாண்க. இங்ஙனே சம்புபக்கமாய்த் துரியமூர்த்தியாகிய குமாரக் கடவுள் சிவபெரு மானே தேவரைக் காக்குமாறு கொண்ட குமரனுய அவதாரமாதலால் சற் புத்திர மார்க்கத்திற் சிறந்த சம்பந்தசுவாமிகளாற் செய்யப்பட்ட செயல் கள் அவரையதிட்டித்துநிற்குங்கடவுள்மேலேற்றியுங் கூறப்பட்டன என்ப தைத் தெற்றெனவுணர்க.

பன்னிரு திருமுறைகட்கும் தலபுராணம் முதலிய பிறவற்றிற்கும் பொருளொற்றுமை பார்க்குமிடத்து வன்மை மென்மை நோக்கித் திரு முறைகளுக் கியையத் தலபுராண முதலியவற்றிற்குப் பொருள் கோடலே யன்றித் தலபுராண முதலியவற்றிற் கியையத் திருமுறைகளுக்குப்பொருள் கோடல் முறையாகாதாதலாலும் வழக்கன் றாதலாலும்தேவாரம் பெரிய புராணமாதிய திருமுறைகட்கியையப்பொருள் கொண்டு சந்தேகத்தை ஒழிப்பீராக. இதுவே முறை என மாதவச் சிவஞானயோகிகள் சிவஞான பாடியத்துக் கூறியிருத்தலையும் ஆண்டுக் காண்க.

திருச்சிற்றம்பலம்.

பாராட்டுப்பாக்கள்.

(குன்றக்குடியில் சைவசித்தாந்த மகாசமாஜத்தில்
வேம்பத்தூர் பிரும்மஸ்ரீ அம்பிகாபதி பாரதியவர்கள்.)

வேதமோ டாகமத்தை வேணியரன் சைவத்தைக்
காதலார் செந்தமிழைக் காசினியிற்—கோதகலப்
பண்பாய் வளர்ப்பதற்கே பாண்டியனோர் வைசியரைத்
தண்மலரோன் நன்குபடைத் தான்.

சுப்பிர மண்ய சுகுணமிகு மாமணியே
இப்புவியோ ரெல்லாரு மேத்திடவே—யொப்பிலாத்
தக்கவர்சொல் சைவசித் தாந்தசமா சத்தையன்பாய்ப்
பக்குவமாக் கூட்டிவைத்தார் பார்.

ஏட்டிற் சிறந்தது ஞானசம் பந்தரி னேடுதமிழ்ப்
பாட்டிற் சிறந்தது நால்வர்சொல் பாட்டு பகர்தவஞ்செய்
காட்டிற் சிறந்தது நைமிசா ரண்ணியம் கற்றவர்க்கீ
நாட்டிற் சிறந்தது செட்டிநா டென்று நவிலுவரே.

சீர்மேவு குன்றைத் திருமுருக னின்னருளால்
ஏர்மேவு மிச்சபையை யேற்றமொடு—வார்மேவும்
அன்பரெலாம் போற்ற வழகுறவே சேர்த்துவைத்த
மன்வணிகர் வாழ்கமகிழ் வாய்.

சைவசித் தாந்தசமா சம்வாழி பாவலர்கள்
தெய்வமாங் கந்தன் தினம்வாழி—யையமின்றிப்
பல்வளமுஞ் செந்தமிழும் பண்பார் தலைவர்முதல்
எல்லாரும் வாழி யினிது.

சீர்மேவு சைவஞ் செழித்திட வாயிரமாம்
ஏர்மேவு ரூபாயை யீந்துவந்து—நார்மேவு
சந்தக் கவிக்கீ சதாசிவப் பேர்படைத்த
சிந்தா மணியே ஜெயம்.

தமிழ்.

(உலகனேரிபட்டி, சித்தாந்த சைவ நிலைய மாணவர்,
திரு, ம. வே. நாராயணன் அவர்கள்.)

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

மலர்தலையுலகி லுள்ள எக்கண்டத்திலும் சிறந்து விளங்குவது நம்பரதகண்டமேயாம். எம்மொழியிலும்சிறந்துவிளங்குவதும் நம்தண்டமிழ்மொழியேயாம். தமிழ்என்பதன் பொருளே இனிமையென நிற்றலானும் நம்தமிழ் மொழிமாண்புமிக்குடையது என்பது தெள்ளிதிற் புலனும். மேலும் திருவிளையாடற் புராணத்தைத் திருவாய் மலர்ந்தருளிய பரஞ்சோதிமுனிவர் அப்புராணத்தின்கண்,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ."

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

எனத் திருவாய் மலர்ந்தருளியிருத்தலானும், நம்செந்தமிழ் மொழியின் சீர்குன்றிலிட்ட தீபமெனப் பிரசித்தியாம்.

செப்புதற்கரும்பெருமை வாய்ந்த இப்பெருமொழியை முருகக் கடவுள் முதலாயினோரும் சங்கத்தமர்ந்து ஆராய்ந்திருக்கின்றனரெனின் பின்பேசவேண்டுவதென்னை? தமிழ்நிலத்தெல்லையாம் வேங்கடவரை தொடுத்து கன்னித்துறைவரை முருகக்கடவுள் யாண்டும் விசேடமாக எழுந்தருளியிருத்தலானும், அப்பெருமானின் பேரருளைப் பெற்றுத் திகழ்ந்த அருணகிரிவள்ளலார் "அருண தளபாதபத்மம் அது நிதமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்த மயில்வீரா!" என்று அதாவது முருகப்பெருமானே! இன்சுவைமிக்க தமிழின்மீது நினக்குள்ள பிரியத்தினால்

அதைக் குறுமுனிவருக்குப் போதித்து அவர் மூலமாக உலகத்தோருக்கு அளித்து, செந்தாமரை மலர்களை யொத்த நினது பாதங்களை மானிடர் தினந்தோறும் துதித்துப் பவசாகரத்தைக் கடந்து ஈடேறுவதற்கு ஓர் மார்க்கத்தை யுண்டுபண்ணிய கருணைக்கடலே! ஓங்காரத்தின் அழகிய சொரூபமான மயிலின்மீது அமர்ந்துள்ள நீ உபதேசித்த அத்தமிழின் பெருமையையும் இனிமையையும் அளவிடவல்லவர் யார்? என்று திருப்புகழ்ப் பாவால் துதித்தலானும், இன்னும் கந்தரலங்காரத்தில், "மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையு மங்கு வாழவைப்போன்..." என்றும் அதாவது முத்தமிழால் நின்னைவைதாரையும் வாழவைத்து அத்தமிழின் மீது உனக்குள்ள ஆசையை விளக்கிக்காட்டின தமிழ் நாயகனே! என்று துதித்தலானும், பிறகாரணங்கள் பலவற்றானும் தலை சிறந்து விளங்கும் மொழி நந்தண்டமிழ் மொழியேயாம். பெரும் பெற்றிவாய்ந்த இம்மொழியில் சங்க இலக்கியங்கள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் புராணங்கள் ஆகிய நூல்கள் பல. அவைகள் அதிகம் கற்றறிந்த அறிவினர்க்கே விளங்குந்தன்மையுடையனவாயிருத்தலின் அந்நூல்களைப் படிப்பார் எவருக்கும் இனிது விளங்குமாறு அறிவுச்சுடர் கொளுத்துதலே இச் "சிவநேச"னின் நோக்கமாகும். ஆகையால் யாவரும் சிவநேசனைப் பெற்று அதிலுள்ள அரியபோதங்களை யுணர்ந்து எல்லாம் வல்ல இறைவனிடத்தும் அவரடியாரிடத்தும் அன்பு செலுத்திப் பவக்கடலைக் கடந்து ஈடேறுமாறு இறைவன் பொற்பாத கமலங்களை அல்லும் பகலும் இறைஞ்சுகின்றேன்.

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
கடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுணா வெழுந்த வேட்கையா லெனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் புளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றாநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
ஐயநின் னூசப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
அடலரா வலங்கல்வே ணியனே."

உ

ஆத்மாவின் வியாபகவறிவை முழுமறைப்பாக மறைத்திருப்பது ஆணவமலமே.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்)

ஆத்மா என்னுஞ்சொல் வியாபகமென்னும் பொருளாதலால், அதுவே ஆத்மா வியாபகப் பொருளென்பதனைக் காட்டும். ஆத்மா வியாபகப் பொருளாயினும் பந்தமுற்றுப் பிறப்பிறப்பிற்றங்கி நிற்கும் இந்நிலையில் அணுவாய் அல்லது எடுக்குஞ் சரீர வளவினதாய் இருக்கக் கூடுமென்று நம்மவருள்ளும் அறியாதார் சிலர் நினைக்கின்றார்கள். முத்தியில் வியாபகமாய்விடுமென்பதும் அவர்களது எண்ணம். முன் வியாபித்திருந்து பின் சுருங்கி ஏகதேசமாய் நெடுங்காலமிருந்து பின்விரிந்து நீளுதலாகிய தன்மை ஒருதனிப் பொருளுக்கு இருக்க மாட்டாதென்பதனையும், அதுவும் சேதன வஸ்துவுக்கு அவ்வியல்பு அடாதென்பதனையும் ஒரு பொருளின் சுயநிலை ஒருபோதும் மாறுபடுவதில்லையென்பதனையும் பதார்த்தவுணர்வுகொண்டு தெளிய அறியாதவர்கள் அப்படி மயங்குவாரன்றி, தெளிய அறிந்தவர்கள் ஒருபோதும் மயங்கார். ஆத்மா சுருங்கி விரிந்துமாறுபடுவதில்லை. எப்போதும் ஓரேதன்மைத்தாம். ஆத்மா என்னும் பெயரே வியாபியென்பதனை யுணர்த்துங் காரணப்பெயராயிருத்தலால், அதனை வேறொன்றுகொண்டு சாதிக்கவேண்டுவதில்லை. ஆத்மா ஆத்மாவேயாம்.

இங்ஙனம் ஆத்மாவினறிவு ஆத்மவியாபக முழுவதுமிருந்தாலும் அந்த அறிவை விளங்கவிடாது ஆணவமலம் முழுமறைப்பாக மறைக்கும். அம்மறைப்பு ஆத்ம வியாபக முழுவதுமே இருக்கும். அதனால் ஆத்மாவினறிவுமறைக்கப்பட்டு விளக்கமின்றியிருக்கும். அது கண்ணானது காணுந்தன்மையுடையதாயிருந்தாலும் இருளினால் மறைக்கப்பட்டபொழுது முழுவதும் மறைக்கப்பட்டு ஒன்றையும் அறிய ஏலாதிருப்பதுபோலும். இந்நிலையே கேவலநிலை. ஆத்மாவினறிவு கெட்டுப்போயிருக்குமென்பதுபொருளல்ல. இருளினால் மறைப்புண்ட கண்ணொளி அக்காலத்துக் கெட்டுப்போவதில்லை.

அறிதலாகிய தொழிலைச்செய்ய இயலாமையே அதனிடத்துள்ளது. அதுபோலவே ஆத்மாவினறிவும் கெடுதலின்றி ஒன்றையும் அறிய இயலாதிருக்கும். இதுவே கேவலத்தில் உள்ளநிலை.

பின்பு, சகலத்தில் அந்த அறிவு ஏகதேசமாகவிளங்கும். சகலமாவது மாயாகாரியங்களாகிய கருவி கரணாதிகள் கூடியிருக்குநிலை. எங்கணும் பிரகாசித்து நிற்கும் சிவத்தின் வியாபகத்தைத் தலைப்பட்ட ஆத்மாவினறிவு வியாபகஅறிவாய் நிற்கும். இங்ஙனம் அறிவு முழுவதும் விளங்கப்பெறாமையும் வியஞ்சகப் பொருளின் விளக்க அளவில் ஏகதேசமாக விளங்கப்பெறுதலும், வியாபகமெங்கணும் பூரணமாக விளங்கப்பெறுதலும் என்னும் வேறுபாடே கேவலம் சகலம் சுத்தமென்னு மூன்றுநிலைக்கண்ணுமுள்ளன. இங்ஙனம் அறிவின்வியாபார வேறுபாடேயல்லாமல் ஆத்மாவாகிய பொருளின் வேறுபாடு மூன்றிடத்தும் இல்லை; இவை இப்படி இருத்தலால் ஆத்மா சுருங்கிற்று விரிந்தது என்னுங் கொள்கைகள் விபரீத சிந்தையேயாம்.

ஆணவமலத்தால் முழுவதும் மறைக்கப்பட்டிருந்த அறிவு கலையாதிகளால் ஏகதேசமாக விளக்கப்படலால் இச்சகலத்தில் ஆத்மா ஏகதேச விளக்கமுடையதாகும்.

எனவே ஆத்மாவினறிவு கேவலத்தில் முழுமறைப்பாகவும், சகலத்தில் விபரீதஞானமாகவும், சுத்தத்தில், அறியாமை விபரீத ஞானங்களில்லாது சுத்த அறிவாகவும் இருக்கும். விபரீதஞானமாவதுதானல்லாததேகாதிகளைத்தானென்றும், தனதல்லாத பிரபஞ்சப் பொருள்களைத் தனதென்றும் எண்ணும் மாறுபாடான அறிவாம். எனவே ஆத்மாவின் வியாபக அறிவை மறைத்திருப்பது ஆணவமலமே என்பதை யறிந்துகொள்க.

"அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றுய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னாகிப் பசுவென நிற்கு மான்மா."

வீரமகளிர்.

——()[]()——

(திருப்பூந்துருத்தி திரு, T. T. சண்முகசுந்தரம் அவர்கள்.)

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே" என்று பாரததேவியின் தவப்புதல்வன் கவியரசன், பாரதி புகழ்ந்துபாடியுள்ள அமிழ்தினுமினிய நம்தமிழ்நாடு முன் சேரசோழ பாண்டியரென்னும் முடியுடைவேந்தர் மூவரால் ஆளப்பட்டு வந்ததென்பது யாவரும் அறிந்ததே! அவர்கள் தங்கள் வெற்றியின் அறிகுறியாகத் தங்களது எழில் இலாஞ்சனைகளைப் பல தீவுகளினுஞ் சென்று பொறித்துள்ளார்கள். இதனைப் பாரதியார்:—

"சிங்களம் புட்பகம் சாவக மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு"

எனப் புகழ்ந்துள்ளார். இவ்வரிய சிறப்புவாய்ந்த நமது தாய்நாடாகிய தமிழ் நாட்டில் வீரமே உருவெடுத்தாற் போன்ற பல வீரப்பெண்மணிகள் நிறைந்திருந்தார்களென்பது சரிதவாயிலாகவும், இலக்கியமூலமாகவும் ஆன்றோர் கண்ட துணிபு. அந்தமறக்குடிமகளிரின் மாசிலா வீரத்தை, எட்டுத்தொகையுள் ஒன்றாகிய புறநானூறு என்னும் நூலிலுள்ள சில பாடல்களால் அறியலாம்.

"மேனு ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டுவிருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

என்னும் பாடலின் பொருளை நோக்குங்கள். தனது தந்தை தன்னை யெதிர்த்துவந்த யானைப்படையைச் சிதற அடித்துப் புறமுதுகிட்டோடாது போர்க்களத்திலே இறந்தான். அவள் கணவனோ தான் ஒருவனாய்த் தனித்து நின்று பெரும்படையுடன் போர்செய்து மடிந்தான். இன்றோ வீதியில் போர் முரசின் முழக்கம் கேட்கிறது. அப்பொழுது அவளது

மனம் எவ்வாறிருக்கும். இடியோசையைக் கேட்ட நாகம் போலல்லவா இருக்கவேண்டும். ஆனால் அவள் மனம் வீரஉணர்ச்சியால் உந்தப்பட்டு நமது வீட்டிலிருந்து போரினுக்குச்செல்ல மனிதரில்லையே யென்று மயக்குற்றது. பின் தெளிந்து தனது அருமருந்தன்ன ஒரே மகனை அழைத்து வேலினைக் கையில் கொடுத்துப் போரினுக்குச் செல்லென்று கூறினள். அப்பெண்ணரசியின் வீரந்தான் என்னே!

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந் து பெயர்தல் காளைக்குக் கடனே"

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று பையலென்றபோது பரிந்தெடுத்ததாய்" தன்மகனின் கடமையினைக்கூறும் இயல்பினைப்பாருங்கள். பிள்ளையைப்பெற்று வளர்த்து வாலிபனாக்குதல் என் கடன். கலையில் வல்லவனாக்குதல் தந்தையின் கடமை. "தந்தையொடு கல்விபோம்" என்றஅடி இங்கு நோக்கற்பாலது. பசுமரத்தில் பாயும் ஆணியைப் போல் பகைவர் மார்பில் பாய்ந்துசெல்லும் பக்குவமான வேலினைச்செய்து கொடுப்பது கொல்லனின் தொழில். நால்வர்க்கும் நல்லவன் என்ற தன்மையை அடையச்செய்தல் அரசனின் கடமை. ஆனால் என் மகனின் கடமையோ நெருப்புப்போல் ஒளி பொருந்திய வாட்படையை முறியடித்துப் பர்வதம்போன்ற யானையை வீழ்த்திப் போரினில் பகைவரைமுறியடித்து வெற்றியுடன் திரும்புதல் என்று தன்மகனின் பணியைப் பெருமிதத்துடன் கூறும் வீரத்தாயின் ஆவேச உணர்ச்சியையாரால் அளவிட முடியும்?

"வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃக மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு".

வேற்றரசன் தங்கள்நாட்டின்மேல் படையெடுத்து வந்துவிட்டான். ஆனால் பாலுண்ணும் பச்சிளங் குழந்தையைத் தவிர வேறு யாரும் அவ்வீட்டில் இல்லை. எங்குச் சென்றார்கள். போரில் புறமுதுகிட்டோடாது நின்று போர்புரிந்து வீருலசெய்தினார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. அப்படி யாவரும் போரில் மடியவும் மறக்குடியில் பிறந்த நங்கையானதால் பாலுண்ணும் தன் மகன் வாயினின்றும் தனது தனத்தினைப்பறித்தெடுத்

துக் கூறுகின்றாள். தன்முன்னோரின் நடுகல்லைச் சுட்டிக்காட்டிப் பகைவர்களின் மார்பில் பட்டு வளைந்தவேலினை நிமிர்த்துத் தன் புதல்வன் கையில் கொடுத்துப் போருக்குச்செல்லென்றாள். பாலுண்ணும் பச்சிளங் குழந்தையினைப்போரினுக்கு அனுப்பத் துணிந்த மங்கையின் மறத்தன்மை தான் என்னே!

"சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
வீன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்களத் தானே"

ஓர் மங்கை மறக்குடிப் பிறந்த மகளை நோக்கி உன்மகன் எங்கேயென்று கேட்டதற்கு அம்மங்கை கூறும் மறுமொழியில் உள்ள வீரச்சுவையை நோக்குங்கள். என் மகன் எங்குச் சென்றானென்பதை யானறியேன். ஆனால் அவனைப் பார்க்கவேண்டுமாயின் போர்க்களத்தின் கண்ணே சென்றால் பார்க்கலாம் என்று மறத்தன்மையுடன் பதிலிறுப்பதைப் பாருங்கள். "புலிகிடந்துபோன கன்முழை" என்றஉவமையின் தன்மைதான் என்னே!

"கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெய்போற் கிடந்தானென் னேறு."

என் தகப்பன் மாற்றாருடன் புறங்கொடாது பொருது போர்க்களத்தே மடிந்ததினால் வீரத்தின் அறிகுறியாக நடப்பட்ட கல்லிலே பொருந்தி நின்றான். என்கணவனோ போர்க்களத்தே பொருது மடிந்தான். என் உடன் பிறந்தவர்களோ பகைவருக்குப் புறங்கொடாது எதிர்த்துநின்று மடிந்தார்கள். என் அருமை மகனோ தன்சேனை கெடவும் தான் புறமுதுகிடாது பகையரசன்மேல் எதிர்த்துச் சென்றுபட்டு வீழ்ந்தான் என இம்மங்கை தன் மறக்குடியின் தன்மையைக் கூறும் பெருமிதத்தை நோக்குங்கள்.

"....................................னன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே"

தன்மகன்களி றெறிந்து இறந்தான் என்பதைக் கேள்வியுற்றதும் "பைய

லென்றபோதுபரிந்தெடுத்துச் செய்யவிரு முகத்தணைத்து மோந்து முலை தந்த நாளினும் பெரிது மகிழ்ச்சியடைந்தாள்.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்று பலர்கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

தசையென்பதே வற்றி நரம்புந் தோலுமாய்த் தளர்ந்த வயதையடைந்த கிழவியின் நிலையைப்பாருங்கள். தன் மகன் போரில் புறங்காட்டி ஓடி வரும்பொழுது மடிந்தானென்று பலர் கூறுவதைக்கேட்டவுடன் அவள் கூறும் வீரத்தினை நோக்குங்கள்; என்மகன் போரினுக்குப் புறமுதுகிட்டு ஓடிவந்து மடிந்தானாயின் அவன் பாலுண்ட என் தனத்தினை அறுத்தெறிவேன் என்று உறுதிமொழிகூறுகின்றாள். இதனால் தான் அவனுக்கு ஊட்டியயால் வீரப்பால் இல்லையென்றதையும், போரில் புறங்கொடுத்தோன் வாய்வைத்துச் சுவைத்துண்ட தனத்தினை இனிவறிதே சுமப்பதில் பயனில்லை யென்பதையும் உணர்த்தி நிற்பதைப் பாருங்கள். அவள் போர்க்களம் சென்று தன் மகனுடையஉடல் பகைவரின் பாணங்களால் சிதைவுற்று வேறாகக் கிடப்பதைக் கண்டதும், "முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து அந்திப் பகலாய் நொந்துபெற்ற தலை நாளினும் பெரிது மகிழ்வுற்றாள்.

"இடைப்படை யழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடையாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
வோடாப் பூட்கை விடலை தாய்க்கே"

தன் மகன் உடல் போர்க்களத்தே சிதைந்துகிடக்கும் மாண்பினைக் கண்டவுடன், அவள் வற்றி உலர்ந்த தனமானது பாலூறிச் சுரந்ததாம். தன் புதல்வன் போரில் புறங்கொடாது எதிர்த்து நின்று வீரசொர்க்கம் புக்கதால் வீர அன்பு மேலிட்டு வயது முதிர்ந்தவளுக்குப் பால் பொங்கிற்றென்றால் மகளிர்களுக்குப் போரின்கண் [illegible] உணர்ச்சிக்கு வேறுசான்றும் வேண்டுமோ? அன்பர்களே! [illegible] பெண்மக்களின் வீரவுணர்ச்சி எத்தனை மடங்கு சிறந்த[illegible]தை யெண்ணிப்பாருங்கள்.

செய்தித்திரட்டு.

தஞ்சை:— பெரியகோவிலில் இம்மதி ௨௪வ. சிவநிசியன்று திருமஞ்சன திருவாராதனைகளும் அன்றிரவு 2-மணிக்கு பெரிய வெள்ளி இடபத்தில் சுவாமி யெழுந்தருளுதலும், தேவாரபாராயணமும், ௨௫வ. நண்பகலில் அடியவர்க் கமுதருத்தலும், மாலையில் கவிராசபண்டித சித்திர கவி சிவராமபாகவதரவர்களால் ஸ்ரீ பக்த ராமதாஸ் சரித்திர காலக்ஷேபமும், ௨௬வ. மாலையில் செந்தமிழ்ச்செல்வர்களின் சீரிய விரிவுரைகளும் செய்யப்பெறும்.

சைவ சித்தாந்த சபையின் பத்தாவதாண்டுவிழா பங்குனி ௧௧வ. மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் திருவாளர், வ. சு. சண்முகம்பிள்ளையவர்கள் தலைமையில் சித்தாந்தச் செல்வர்களின் சீரிய விரிவுரைகளுடன் நடைபெறும்.

பண்டிதர் சிலர்கொண்ட பொருட் போக்கு:— மாட்சியென்பது மாளுதலாம். பாட்டுடைத்தலைவரென்பதைப் பாட்டு உடைத்து அலைவர் எனப் பிரித்துப் பொருள்கொள்ளவேண்டுமாம்.

கோட்டையூர்:— சிவாலய மகாகும்பாபிஷேகம் தை ௮வ. மிகச் சிறப்பாக நடைபெற்ற செய்தி சென்றமாதச் சிவநேசனில் வந்துளது. தேவார பாராயணக்காரருக்குச் சபையற்காரராக வந்த திருவாரூர் வீரப்ப பிள்ளைவர்கையார் மெச்சப்பெற்றார்கள். அவ்வுணவுச்சாலையில் தனவணிகமக்கள் மிகுதியாகச்சென்று அமுதருந்தினர். சிவாசாரியர்களின் உணவுச்சாலையிலும் வைதீக முறையில் மிகுதியாகக் கூடியுண்டனர். சிவாசாரியர்களும், தேவார ஓதுவார்களும் ஒரு நூற்றுவரும், ஆரியவேதபாரகர் முன்னூற்றுவரும் கூடியிருந்து சிவமகாயாகமும் ஜெபங்களும் பாராயணங்களும் செய்தபெற்றி பேரன்பையும் ஆர்வத்தையும் பெருக்கியது. யாகக்கிரியைகள் சிவாகம விதிப்படி உரியகாலங்களில் சிறப்பாகச் செய்யப்பெற்றன. காலை மாலைகளில் சந்தியாவந்தனம் செய்தபின்னர் சிவாசாரியர்களை யாகசாலைக்கு அழைத்துவந்த காட்சி திருக்கயிலையிலிருந்து சிவகணங்கள் எழுந்தருளி வருவதையொத்திருந்தது. யாகசாலைநிர்வாகத்தை தேவகோட்டை சிவமகாயாக நிருவாககராகிய திருவாளர், தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்மேற்கொண்டுதிறம்பெற நடாத்தினார்கள். அவர்களை நகரத்தார் அன்பு பாராட்டி மேளதாள விருதுகளுடன் திருக்கோயில் வழிபாடு செய்வித்து அம்பிகை சந்நிதியில் மாலை பரிவட்டம், காளாஞ்சி மரியாதைகள் வழங்கி அவர்களின் இருக்கைக்கு அழைத்து வந்தனர். சலியாதுழைத்து மகாகும்பாபிஷேகத்தை மாண்புற நடாத்திய நகரத்தார்களுக்கு ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் அணிமாவாதி அட்டசித்திகளையும் அருளுவாராக என சிவசுப்பிரமணிய சிவாசாரியார் தெரிவிக்கின்றனர்.

உலகம்பட்டி:- திருஞானசம்பந்தவாசகசாலையின் 19-ஆம் ஆண்டுநிறைவுவிழா தை ௧௬வ. பிற்பகல் பெருஞ்சொற்கொண்டல் புரிசை, திரு, சு. முருகேசமுதலியாரவர்கள் தலைமையில் பல புலவர்களும், தமிழ்மாணவர்களும் விரிவுரைகளாற்ற இனிது நிறைவேறியது. உயர்திரு, இலக்குமண ஞானதேசிக சுவாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். பலவூர்களிலிருந்தும் மக்கள் பலர் வந்து குழுமியிருந்தனர். வாசகசாலை நீடுவாழ்க.

சிவநேசன்.

சென்னை:— ஸ்ரீதண்டபாணிக் கடவுள் சர்வாபரணாலங்கிருதராய் வெள்ளிமயில் வாகனரூடராய் பவழக்காரத்தெருவில் தனவணிகநகரத்தார்களுக்குரிய பழையகோவில்வீட்டிலிருந்து பொன்மயமான கோரதத்திலும் புதுக்கோயில் வீட்டிலிருந்து வெள்ளிரதத்திலும் எழுந்தருளி மேளதாள விருதுகளுடன் மாசி ௭-உ திருவொற்றியூருக்குப் பவனிவந்து தனவணிக நகரத்தார்களின் மடத்தில் அமர்ந்தருளி திருமஞ்சன திருவாராதனைகளுவந்து வெள்ளிப்பரியேறி தியாகேசர் திருக்கோயில் திருவீதிவலம்வந்து மீண்டும் நகரத்தார் ஆச்சிரமத்தின் சிகரத்தமர்ந்து அ, க,௰-உகளில் மாகேசுரபூசையின் வைபவங் கண்ணுற்று ௧௧-உ திருவொற்றியூரிலிருந்து சென்னைக்கு வந்து தமதிருக்கை சேர்ந்தருளினர். திரளான அன்பர்களும் ஆயிரக்கணக்கில் தனவணிகமக்களும் வந்து தரிசித்தின்புற்றனர்.

ஸ்ரீகாசியாத்திரை:—பள்ளத்தூர் திருவாளரும் கோயிலூர் மடாலயத்தில் ஞானவாசிட்டபாடம் கேட்டுக்கொண்டவர்களுமாகிய மு. ராம. சொ. ராம. முத்துவீரப்பஐயா அவர்கள் மார்கழி ௨௩-உ வாரணாசியை யடைந்து கங்காஸ்நானஞ்செய்து விசுவநாதராதியமூர்த்திகட்கு அபிஷேகஆராதனைகள் புரிந்து விபூதிகுங்கும வைரவர்கயிறு ஆகியவைகள் அனுப்பித்தந்துள்ளார்கள். பஞ்சாப் ஆதியஇடங்களைப் பார்த்துக் கொண்டு சிவதலயாத்திரை செய்துவருகிறார்கள். சிவநிசியன்று வடநாட்டுசிவதலதெரிசனஞ்செய்து சிந்தாத்திரையாய் வந்து சேருவார்கள்.

திருப்பூந்துருத்தி:-ஸ்ரீநாராயண தீர்த்தகுரு சுவாமிகளுக்கு மாசி ௨௧-உ முதல் ௩௦-உ வரை அபிடேக ஆராதனைகள்செய்து விழாக்கொண்டாடி இயலிசையரங்குகளும் சுவாமிகளின் சரிதவுரையும் நடைபெற்றன.

திருவிரும்பூளை:— சிவாலயத்தில் மாசி ௪-உ விசாகநாளில் விசேட அபிஷேக ஆராதனைகளும், பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமி விபூதியபிஷேகாலங்காரங்களும் அன்பர்களால் இனிது செய்யப்பெற்றன.

திருமழபாடி:— சிவாலயத்தில் மாசி ௨-உ தொடங்கி ௧௨-உ வரை மகஉற்சவம் மாண்புடன்நடைபெற்றது. 5-வது திருவிழாமுதல் உயர்திரு, ஞானியார் சுவாமிகள்தலைமையில் அரியபெரியவிரிவுரைகள்நடைபெற்றன.

திருமழபாடி:— சிவாலயத்தில் மாசி ௩-உ தொடங்கித்திருவிழா நடைபெற்று ௧௧-உ நிறைவேறியது. இயலிசை யரங்குகளும் இனிது நடைபெற்றன. பங்குனி ௯-உ திருநந்தி தேவருக்குத் திருமண வைபவம் நடைபெறும்.

மதிப்புரை வாழ்த்துக்கள்:— சிவநேசனுக்கு வந்துள்ள மதிப்புரைகளும் வாழ்த்துப்பாக்களும், புத்தகங்களின் மதிப்புரை மஞ்சரியும் அடுத்த திங்களில் வெளியிடப்பெறும்.

திருக்கோட்டியூர்:— சனாதனதர்ம சேவாசங்கம் நிறுவிக் கொடி நாட்டப்பெற்றது. மாசி ௰-உ ௧௧ தேதிகளில் தேவகோட்டை பாலகவி திருவாளர் வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் திருவாளர்களாணமதுரை, N. நடேசையர், N R கிருஷ்ணசாமிஐயங்கார் அவர்கள் திருமகள் செல்லம்மாள் ஆசிரியோர் சீரிய விரிவுரையாற்றினர்.

கிட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. சு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.